Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு

EELA NADU

அங்கீகாரப்படி
தேசிய லொத்தர் (சுவீப்)
பூரண உரிமையாளர்
கொழும்பு பிளான் ஜுவலறி கவுஸ்
நல்லூர், யாழ்ப்பாணம்.
தந்தி: சீதேவி. தொலைபேசி: 461.
கிளை
விஜி கூல் பார்
பஸ் நிலையம், யாழ்ப்பாணம்.
(ராணி தியேட்டருக்கு எதிரில்)
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்.

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி வைகாசி 19 ஆம் நாள் முஹர்ரம் 19 (1-6-64) திங்கட்கிழமை இதழ் 113

# நாளை இந்திய பிரதமர் தெரிவு நடைபெறும்

## ஏகமனதான தெரிவுக்கு காமராஜ் விண்ணப்பம்

புதுடில்லி, ஜூன் 1

நாளைக்காலை 9 மணிக்கு இந்தியாவின் புதிய பிரதமமந்திரியைத் தெரிவுசெய்யுமுகமாக காங்கிரஸ் பார்லிமெண்டரி கட்சிக் கூட்டம் டில்லியில் நடைபெறவிருக்கிறது. தலைவரை ஏகமனதாகத் தெரிவு செய்வதுபற்றி ராஜ்ய முதன்மந்திரிகளுடனும் மற்றும் பலருடனும் கலந்தாலோசிக்கும் அதிகாரத்தை காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜருக்கு காரியக்கமிட்டி அளித்துள்ளது.

தலைவர் ஒருவரைத் தெரிவு செய்யும் விஷயத்தில் எவ்வித அபிப்பிராய பேதமும் கூடாது என்பதையும், தேர்தல் ஏகமனதாக இருக்க வேண்டும் என்பதையும் காங்கிரஸ் காரியக்கமிட்டிக் கூட்டத்தில் திரு. காமராஜ் கேட்டுக் கொண்டார்.

இந்த நெருக்கடியான தருணத்தில் நாம் எப்படி நடந்து கொள்கிறோம் என்பதை உலக நாடுகள் கண்காணித்து வருகின்றன. நேருவைப் போன்ற ஒருவரை நாம் தேட முடியாவிடினும், நேர்மையான முறையிலும் நம்பிக்கையளிக்கும் வகையிலும் வெளிப்படையாக புதிய தலைவரை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்" என்றும் திரு. காமராஜ் கூறினார்.

காரியக் கமிட்டி அங்கத்தினர்கள், ராஜ்ய முதன்மந்திரிகள், திரு. கிருஷ்ணமேனன், திரு. சுப்ரமண்யம் ஆகியோர் இக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நேருவுக்கு ஞாபகார்த்தநிதி வசூலிக்கவும் திரு. காமராஜுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.

## அரசாங்க அதிபர்களுக்கு விசேஷ அதிகாரங்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

அரசாங்கத்தின் கொள்கை சரிவர அமுல் நடத்துவதற்கு பொறுப்பாகவிருந்த மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு அரசாங்கம் இப்பொழுது நாளாந்த நிர்வாகத்துறையிலும் அதிகாரம் வழங்கியுள்ளதாகத் தெரிகிறது.

இவ்வதிகாரம் மூலமாக அரசாங்க அதிபர்கள் தமது மாவட்ட எல்லைக்குள்ளிருக்கும் அரசாங்க இலாகாக்களில் கடமை புரியும் எந்த அரசாங்க உத்தியோகஸ்தரோ அரசாங்க உதவி பெறும் ஸ்தாபனங்களில் கடமையாற்றும் உத்தியோகஸ்தரோ சரிவரத் தத்தம் கடமைகள் புரியவில்லையென்ற குற்றச் சாட்டுகள் கிடைத்து நிரூபிக்கப் பட்டால் உடன் நடவடிக்கை எடுக்கக் கூடிய அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இவ்வதிகாரம் வழங்கப்பட்டதால் உத்தியோகத்தர் உதாசீனமாக இருக்காது, பொதுமக்களுக்கு மதிப்புக் கொடுத்துத் தமது கடமையைச் செவ்வனே நடாத்துவார்களென்றும், தவறின் கால அறிக்கை இல்லாது இடமாற்றஞ் செய்யவோ அல்லது வேறு தண்டனைக்குட்படுத்தவோ அரசாங்க அதிபருக்கு அதிகாரம் வழங்கப்பட்டிருக்கிறது எனத் தெரிகிறது.

அரசாங்க பகுதி உத்தி

(6-ம் பககம் பார்க்க)

## கட்டாயஓய்வு பற்றிய எஸ். ஜே. வி. கடிதம்

### பிரதமரிடமிருந்து இதுவரை பதில் இல்லை

கொழும்பு, ஞாயிறு

சிங்களத்தில் தேர்ச்சிபெறவில்லையென்ற காரணத்துக்காக அரசாங்க சேவையிலிருந்து கட்டாயமாக ஓய்வு பெறுவதற்கு மூன்றுமாத முன்னறிவித்தல் உத்தரவுகள் வழங்கப்பட்டது சம்பந்தமாக பிரதமருக்கு தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. செல்வநாயகம் எழுதிய கடிதத்துக்கு பிரதமமந்திரியிடமிருந்து இதுவரை பதில் கிடைக்கவில்லை.

தமிழரசுக்கட்சியின் நிர்வாக சபை மீண்டும் இவ்வாரம் கூடி கட்டாயஓய்வு உத்தரவுகள்பற்றி ஆலோசனை நடத்துமென்று தெரியவருகிறது.

இதேசமயம் கட்டாயஓய்வு உத்தரவு சம்பந்தமாக அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி தமிழ் அரசாங்க எழுதுவினைஞர் சங்கமும் இவ்வாரம் ஆலோசனை செய்யவிருக்கிறது.

## "தமிழ்பேசும் மக்களின் நல்லெண்ணம் கிடைக்காது"

### பிரதமருக்கு எஸ். ஜே. வி. எழுதியகடிதத்தின் விபரம்

கொழும்பு, ஞாயிறு

"மொழிப் பிரச்னையைச் சுமுகமாகத் தீர்க்கவேண்டுமென்பதில் அதிக சிரத்தை கொண்டிருக்கிறீர்களாதலால், இந்தப் பிரச்னை தீர்க்கப்படுவதற்குப் பாதகமான சூழ்நிலை உருவாவதை அனுமதிக்கவோ விரும்பவோ மாட்டீர்கள் என்றே கருதுகிறேன். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அரசாங்கம் கட்டாய ஓய்வு உத்தரவுகளை சென்ற பெப்ரவரி மாத இறுதியில் இருந்து அரசாங்கத் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு வழங்க ஆரம்பித்துள்ளது" என்று தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார். சமீபத்தில் நிகழ்ந்த தமிழரசுக் கட்சிச் செயற்குழுக் கூட்ட இறுதியில் இந்தக் கடிதம் வெளியிடப்பட்டது.

கடிதத்தின் முழு விபரமும் வருமாறு:-

"புகையிரதப் பகுதியிற் கடமையாற்றும 39 அரசாங்கத் தமிழ் உத்தியோகஸ்தர்களுக்குச் சமீபத்திற் கட்டாய ஓய்வு உத்தரவுகள் வழங்கப்பட்டுள்

(2-ம் பக்கம் பார்க்க)

## 'நேருவின் கொள்கைகள் உலகில் என்றும் நிலைத்துநிற்கும்'

### யாழ். நகரமண்டபத்தில் புகழ் அஞ்சலி

யாழ்ப்பாணம், திங்கள்

"இலங்கைக்கு சுதந்திரம் வேண்டுமென்று அகில இலங்கையிலும் முதன் முதல் குரல் எழும்பியது யாழ்ப்பாணத்திலுள்ள வாலிபர் இயக்கம்தான. தென்னிலங்கையில் எவரும் சுதந்திரம் கோரவில்லை. முதன் முதலில் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவை இலங்கைக்கு அழைத்ததும் இவ் வாலிபர் இயக்கம் தான். ஆனல் இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தபின், பாரதப் பிரதமர் யாழ்ப்பாணம்வர முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது"

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் யாழ். மேயர் திரு. ரி. எஸ். துரைராசா தலைமையில் காலஞ் சென்ற பாரதப் பிரதமர் நேருவின் மறைவு குறித்து நடைபெற்ற அனுதாபக் கூட்டத்தில் கோப்பாய் எம். பி. திரு. எம். பாலசுந்தரம் பேசும் போது மேற்கண்டவாறு கூறினர்.

திரு. பாலசுந்தரம் தொடர்ந்து கூறியதாவது: இலங்கைக்கு சுதந்திர புருஷர்களை அழைத்தது யாழ்ப்பாணத்திலுள்ள வாலிபர்தான். மகாத்மா காந்தி, ராஜாஜி போன்ற பெரியார்களை யாழ்ப்பாணத்திலுள்ள வாலிபர் இயக்கம் தான் முதன் முதலில் அழைத்தது. பாரதப் பிரதமர் நேருவையும் 1930-ம் ஆண்டு முதன் முதலில் இலங்கைக்கு அழைத்தது நாங்கள் தான். சுதந்திரமென்றால் என்ன? அதை எப்படிப் பெறுவது? ஏன் பெறவேண்டும் என்று முதன் முதல் கூறியவர்கள் முக்கியமாக யாழ்ப்பாணத்திலுள்ள வாலிபர்களதான். நேரு யாழ்ப்பாணம் வந்தபோது சர். வைத்திலிங்கம் துரைச்சாமி வீட்டில் தான் தங்கினர். யாழ்ப்பாணத்தில் உள்ள வாலிபர்களுடன் தான் உரையாடினர். ஆனல் இலங்கை சுதந்திரம் பெற்றபின் அவர் யாழ்ப்பாணத்திற்கு முக்கியமாக தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளுக்கு வர முடியாத நிலை ஏற்பட்டது. நேருவைப்பற்றி உலகம் முழுவதும் புகழ்ந்து விட்டது. ஆனல் இனிமேல் அவரை எப்படி புகழ்வதென்று எனக்கு தெரியாது. நேருமறைந்தாலும, அவரது லட்சியங்கள், கொள்கைகள் மறையாது".

தலைமையுரையின் போது யாழ். மேயர் திரு ரி. எஸ், துரைராசா கூறியதாவது:

"நேரு பாரதத்தில் பிறந்திருந்தாலும், உலகத்தில் சமாதானத்தை நிலை நாட்ட தமது உயிரை அர்ப்பணம் செய்தார். அவரது தகப்பனாராகிய மோதிலால் நேரு அவரை பெரிய உத்தியோகம் வகிப்பதற்காக படிப்பித்தார் ஆனல் அவரையோ காந்தியின் சக்தி கவர்ந்து கொண்டது. பாரதத்தின் சுதந்திரத்திற்காக பல கஷ்டங்கள் அடைந்தார். அவரது புகழ்

(6-ம் பக்கம் பார்க்க)

## புத்தளம் சிமெந்து தொழிற்சாலை பூர்த்தியாகும் நிலையில் உள்ளது

கொழும்பு, ஞாயிறு

புத்தளத்தில் நிறுவப்பட்டு வரும் இரண்டாவது சிமெந்து தொழிற்சாலை இப்பொழுது பூர்த்தியாகும்கட்டத்தில் உள்ளது.

சிமெந்து கூட்டு ஸ்தாபனத்தின் விஸ்தரிப்பு திட்டத்தின் கீழ் இத் தொழிற்சாலை எட்டுக்கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுவருகிறது. இத் தொழிற்சாலை தனது உற்பத்தியை ஆரம்பிக்கும்பட்சத்தில் நாட்டுக்குத் தேவையான சிமெந்தை ஓரளவு பூர்த்திசெய்ய முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

புத்தளத்தில் அமைக்கப் பட்டுவரும் இரண்டாவது சிமெந்து தொழிற்சாலை வருடம் ஒன்றுக்கு நான்குலட்சம் தொன் சிமெந்து உற்பத்தி செய்யும்.

## மணிவாக்கு

தாய், தந்தையரைவிட குழந்தைகள் விவேகிகள். அவர்கள் வளர்ச்சியடைந்ததும், துரதிர்ஷ்டவசமாக, அவர்களது இயற்கையான விவேகம், அவர்களது பெரியவர்களின் போதனையாலும் நடத்தையாலும் கெட்டுவிடுகிறது.

— ஜவஹர்லால் நேரு.

ஈழநாடு
EELA NADU
EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு வைகாசி ௴ 19 உ (1-6-64)

## கட்டாய ஓய்வு உத்தரவு

சிங்களம் தெரியாத காரணத்தால் அரசாங்க சேவையிலிருந்து கட்டாயமாக அரசாங்க ஊழியரை ஓய்வுபெறச் செய்யும் உத்தரவுகளை வாபஸ் பெறுமாறுகோரி தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. செல்வநாயகம் பிரதமருக்கு எழுதிய கடிதத்துக்கு பிரதமர் இதுவரை பதில் அளித்ததாகத் தெரியவில்லை.

உத்தியோக மொழியான சிங்களத்தில் தேர்ச்சிபெறவில்லையென்ற காரணத்தினால் கட்டாயஓய்வு பெற வேண்டுமென முன்னறிவித்தல்கொடுக்கப்பட்ட அரசாங்க ஊழியரின் தொகை அதிகரித்துள்ளது. கட்டாயஓய்வு உத்தரவு வழங்கப்பெற்ற முதலாவது ஊழியர், அந்த உத்தரவின்படி இன்றுமுதல் கட்டாயமாக சேவையினின்று ஓய்வு பெற வேண்டும். இந்நிலையில் இதுசம்பந்தமாக அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளதென்பது தெரியவில்லை. கட்டாயஓய்வு உத்தரவுபற்றி நேற்றுமுன்தினம் தமிழரசுக் கட்சியின் நிர்வாகசபைஆலோசனை நடத்தியதாக அறிவிக்கப்படுகிறது. பிரதமருக்கு திரு. செல்வநாயகம் அனுப்பிய கடிதத்தின் பிரதி மட்டுமே கூட்ட முடிவில் வெளியிடப்பட்டது. கூட்டத்தில் தீர்மானம் எதுவும் நிறைவேற்றியதாகவோ என்ன நடவடிக்கை எடுப்பது என்று தீர்மானிக்கப்பட்டதாகவோ தகவல் இல்லை.

கட்டாயஓய்வு உத்தரவு ரயில்வே இலாகாவில்தான் அதிகமாக வழங்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவுகளை வாபஸ் பெறுவதற்கு ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா விருப்பம்கொண்டுள்ளதாக சில தினங்களுக்கு முன் ஒருசெய்தி கூறியது. இது உண்மையாக இருப்பின் பலருக்கும் நிம்மதியும் மகிழ்ச்சியுமளிக்கும். இதேபோன்று கட்டாயஓய்வு உத்தரவுகள் யாவும் வாபஸ் பெறப்பட்டால் நல்லசூழ்நிலை ஏற்படுமென்பது உறுதி.

"மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு நீங்கள் ஆர்வம் கொண்டிருப்பதாகவே கருதுகிறேன். எனவே அத்தகைய தீர்வு ஏற்படக்கூடிய, சூழ்நிலையைக் கெடுக்கக்கூடிய நடவடிக்கை எதையும் நீங்கள் செய்யமாட்டீர்கள் என்றும் எண்ணுகிறேன். ஆனால் துரதிருஷ்டவசமாக கட்டாயஓய்வு உத்தரவுகள் பழைய தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இது அநியாயமான செயல் என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்வதுடன் இந்நிலையில் உங்கள் அரசாங்கம் தமிழ்மக்களின் நல்லெண்ணத்தை எதிர்பார்க்கவும் முடியாதென்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று திரு. செல்வநாயகம் இம்மாதம் 18-ம்திகதி பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சிங்களம் தெரியாத அரசாங்கஊழியர் பாதிக்கப்படமாட்டார்கள் என்று காலஞ்சென்ற பிரதமர் பார்லிமெண்டில்தெரிவித்ததையும் திரு. செல்வநாயகம் தமது கடிதத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

இக்கடிதத்துக்குப் பிரதமர் இதுவரை பதில் அளிக்கவில்லை. கூட்டு அரசாங்கப் பேச்சுவார்த்தைகளும் இந்தியப் பிரதமர் நேருவின் மரணத்தினால் திடீரென இந்தியா செல்ல நேர்ந்ததும் பிரதமர் பதிலளிக்காததற்குக் காரணமாக இருக்கலாம். ஆனால் இது ஒரு சமூகத்தைப் பாதிக்கக்கூடிய முக்கியமான விஷயமென்பதையும், பெருந்தொகையான மக்களின் வாழ்க்கையுடன் சம்பந்தப்பட்டதென்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். இதற்கு முன்பும் கூடத் தமிழ்பேசும் மக்களின் உரிமைவிஷயமாக திரு. செல்வநாயகம் எழுதிய கடிதத்துக்குப் பிரதமர் சரியாகப் பதில் கொடுக்கவில்லை என்பதையும் மறந்துவிடமுடியாது.

தமிழ்பேசும் மக்களைப் பொறுத்தவரையில் அரசாங்கம் சிறிதும் கவலைப்படவில்லையென்று, தமிழ்பேசும் மக்கள் மனதில் பொதுவாக நிலவும் அபிப்பிராயத்தைப் பிரதமரது இச்செயல் உறுதிப்படுத்துவதாகவே உள்ளது. இதில் உண்மையிருப்பின் நிச்சயம் யாரும் மகிழ்ச்சியடையமுடியாது. இலங்கையின் பிரதமர், இந்த நாட்டின் பெரும்பான்மைச் சமூகத்துக்கு மட்டும் பிரதமர் அல்லவென்பதையும் அவ்விதம் கருதினால் இங்கு ஜனநாயகம் கேலிக்கூத்தாகிவிடுவதுடன் இங்கு தேசிய ஐக்கியத்தை நினைத்துப் பார்க்கவும் முடியாதுபோய் விடும்.

மறைந்த இந்தியத் தலைவர் ஜவஹர்லால் நேருவின் ஈமச் சடங்கில் கலந்துகொண்ட நமது பிரதமர், அங்கு பல்வேறு இன, மத, மொழி மக்களும் நேருவுக்காகக் கண்ணீர் விட்டுக் கலங்கியதை நிச்சயம் பார்த்திருப்பார். நேருவின் மீது அத்தனை மக்களும் அன்புகொள்ளக் காரணம்? ஜாதி, மத, இன, மொழி வேறுபாடின்றி எல்லோரையும் சரிசமமாகக் கருதி வாழ்ந்தார் என்பதை எவரும் புரிந்துகொள்வர். எனவே இந்நாட்டிலுள்ள சகல மக்களையும் அவர்கள் எந்த மொழியைப் பேசினாலும், எந்தச் சமயத்தைச் சேர்ந்தவரானாலும் அவர்களைச் சரிசமமாகக் கருதி நடத்தவேண்டியதும், எல்லோருக்கும் சம உரிமை வழங்கவேண்டியதும் அவசியம் என்பதையும் இதன்மூலமே நேரு கண்ட தேசிய ஐக்கியத்தை இலங்கையும் காண முடியும் என்பதையும் பிரதமர் உணரவேண்டும். ஒருபகுதி மக்களுக்கு எதிரான, பாரபட்சமான சட்டங்களையும், நிர்வாக நடவடிக்கைகளையும் பிரதமர் நீக்கவேண்டும். இதற்கு முதற்படியாகத் தமிழ் அரசாங்க ஊழியர்களுக்குப் பிறப்பிக்கப்பட்ட கட்டாய ஓய்வு உத்தரவைப் பிரதமர் இன்றே வாபஸ்பெற உத்தரவிடவேண்டும்.

வடமராட்சியில்

# வெண்காய உற்பத்தி பாதிப்பு
## உவர்மண் வீச்சே காரணமாம்

உடுப்பிட்டி, ஞாயிறு

வடமராட்சிப் பகுதியின் கரையோரப்பகுதியில் இந்த முறை பெருமளவில் வெண்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. சோழகக் காற்று செம்மணியிலிருந்து உவர் மண்ணை அள்ளி வீசுவதனால் கட்டைவேலி, துன்னாலை, கரவெட்டி, கரணவாய் ஆகிய இடங்களிலுள்ள தெற்கு கரையோரப்பகுதிகள் கமச்செய்கைக்கு உபயோகமற்றவையாகிவிட்டதே இதற்குக் காரணம். கிணற்று நீரும் உவர்மண் வீச்சால் பாதிக்கப்பட்டுள்ளது. உவர் நீரைப் பாய்ச்சுவதனாலும், அதிக உஷ்ணத்தாலும் செய்கைபண்ணப்பட்ட வெண்காயத் தாள்கள் கருகிவிட்டன.

வடமராட்சி உற்பத்தி மேற்பார்வையாளர் திரு. மு. கணபதிப்பிள்ளை இதுபற்றிய புள்ளி விபரங்களைத் திரட்டுவதிலும் மேற்கொண்டு உசித மான நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் கவனஞ் செலுத்திவருகிறார்.

இப்பகுதியின் பொருளாதார அபிவிருத்திவெண்காயச் செய்கையிலேயே பெருமளவு தங்கியுள்ளது

## "இரசிகமணிக்கு பாராட்டு"

கீரிமலை, ஞாயிறு

அண்மையில் கிழக்கிலங்கை எழுத்தாளர் சங்கம் திரு. கனக செந்திநாதனுக்கு 'இரசிகமணி' என்ற பட்டம்வழங்கிக் கௌரவித்ததை வரவேற்குமுகமாக, மாவை மூத்தமிழ்க் கலைமன்றம் கீரிமலையில் பண்டிதர் திரு. வே. சங்கரப்பிள்ளை தலைமையில், ஒரு பாராட்டுவிழா நடாத்தியது.

தலைவர் தமது உரையில் திரு. செந்திநாதன் பண்டிதமணியிடம் இரசிகத்தன்மையைப் பெற்றுக்கொண்டாரென்றும், அவர் பல அரிய நற்சேவைகளை தமிழ் இலக்கிய உலகில் செய்தாரென்றும், அதன் காரணமாக அவருக்கு அளிக்கப்பட்ட இரசிகமணிப் பட்டம் ஈழத்திருநாட்டுத் தமிழ் மக்கள் அனைவருக்கும் பெருமை தரும் செயலென்றும் கூறினர்.

மன்றத் தலைவர் பிரமஸ்ரீ சண்முகநாதக் குருக்கள் பேசுகையில் இலக்கியத்துறையில் திரு. கனக செந்திநாதனுடைய சேவையைப் பாராட்டியதுடன் சிறப்பாக விமர்சனத்துறையில் அவர் ஒரு முன்னோடி என்று கூறினர்.

இரசிகமணி கனக செந்திநாதன் பதிலளிக்கையில், தான் சென்ற இருபத்தைந்து ஆண்டு காலமாக ஓரளவு இலக்கியத்துறையில் ஈடுபட்டு பண்டிதமணி போன்றோரின் உறவினாலும் ஆசியினாலும் பல தொண்டுகளை இலக்கியத்துறையில் செய்ய முடிந்ததென்றும், தமக்கு அளிக்கப்பட்ட கௌரவம் தமிழ் இலக்கியத் துறையில் ஈடுபடும் வருங்கால மக்களுக்கு உற்சாகமளிக்கக் கூடுமென்றும் கூறி இறுதியில் மாவை முத்தமிழ் மன்றத்துக்கும் தமது நன்றியைத் தெரிவித்தார்.

இதைத் தொடர்ந்து மாவை முத்தமிழ் மன்றத்துப் புதிய நாடகமாகிய "பரதன்" என்ற இலக்கிய நாடகத்தை இயக்குநர் ஏ. ரி. பொன்னுத்துரை ஆரம்பித்துவைத்தார். சங்கீத வித்துவமணி திரு. ஆர். மூர்த்தி ஐயரும் உரை நிகழ்த்தினர். இறுதியில் நடன நிகழ்ச்சியும் தேநீர் விருந்தும் நடந்தன.

## "தமிழ்பேசும் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளன.

இத்தகைய நடவடிக்கைகளைத் தமிழ் மக்கள் மீது எடுப்பது அநீதியானதென்றும், அதனால் அரசாங்கத்துக்கு அவர்களது நல்லெண்ணமும் ஒத்துழைப்புங்கிடைக்காமற்போகுமென்று தங்களுக்குத் தெரிவிப்பதில் வருத்தமடைகிறேன்.

1957-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25-ந் திகதி பாராளுமன்றத்திற் பண்டாரநாயக்கா சொன்னது பின்வருமாறு:-

"இன்றைய சூழ்நிலைகளின் விளைவாகச் சிங்களத்தை அரசகருமமொழியாக்க வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்பட்டிருப்பினும், சிங்களத்தைத்தாய் மொழியாகக்கொண்டிராதவர்களை இந்தச் சட்டத்தின் மூலம் துன்புறுத்தவேண்டும் என்ற எண்ணம் அரசாங்கத்துக்குக் கிஞ்சித்துங் கிடையாதென்பதை இந்தச் சபையும், நாடும் நன்கறியும்"

அதே சமயத்தில் பண்டாரநாயக்கா பின்வருமாறும் கூறியிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

"வேறு விதமாகச் சொல்வதானால் சிங்களத்தைத் தேசிய மொழியாக அங்கீகரிக்கும் அதேசமயத்தில், சிங்களமொழியில்பரிச்சயமற்ற வேறுமொழிப் பாண்டித்யமுடைய இந்த நாட்டு மக்களுக்கு எந்தவிதமான வசதிக் குறைவுகளோ, கஷ்டங்களோ ஏற்படாதவிதத்திலேயே அச்சட்டத்தை அரசாங்கம் அமுல் செய்யும் எனலாம்."

காலஞ் சென்ற பிரதமரின் மேற்கூறிய கூற்றுகளுக்கும், உத்தியோகஸ்தர்களை அவர்களதுசேவைக்காலத்தின் நடுப்பகுதியில் வேலையற்றவர்களாக்கும் தங்கள் நடவடிக்கைக்குமிடையில் இத்தனை முரண்பாடு ஏன் என்பதுதான் புரியவில்லை.

அரசாங்க தமிழ் உத்தியோகஸ்தர்கள் படிக்குந்திறமின்மையாலேயோ அல்லது விருப்பின்மையாலேயோ சிங்களம் படிக்க மறுக்கிறார்கள் என்பது வெளிப்படை.

கோடீஸ்வரன் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பு இந்த அரசாங்க உத்தியோகத்தர்களின் பக்கமே நியாயம் உள்ளதென்றும் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் நியாயமற்றவை என்றுஞ் சந்தேகத்துக் கிடமின்றி நிரூபனமாகிவிட்டது.

தமிழ் மக்களின் உள்ளங்களைப் புண்படுத்துவது உண்மையிலேயே உங்களுக்கு சம்மதமில்லாத காரியமானால் உடனடியாகத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் கட்டாய ஓய்வு உத்தரவுகளை வாபஸ் பெறும்படியும் வேண்டுகிறேன்.

## நாட்டிலும் நகரிலும்

1950-ம் ஆண்டில நேருஜி இலங்கைக்கு வந்திருந்தார். பிரதமரானபின்பு அவர் இங்கு வந்தது அதுவே முதல்தடவையென்று ஞாபகம். கொழும்பிலுள்ள செனேட் சபை கட்டடத்தில் பிரசித்தி பெற்ற கொழும்பு மகாநாடு நடைபெற்றது. வெளிநாட்டு மந்திரி என்ற முறையில் நேருஜியும் அதில் கலந்து கொண்டார். சாம்ராஜ்ய நாடுகளுக்கிடையே தொழில் நுட்பக்கல்வி பரிவர்த்தனை செய்து கொள்ளும் கொழும்புத் திட்டமும் இந்த மகாநாட்டில்தான் உருவாகியது.

இதில் பங்கு பற்றிய பிரிட்டிஷ் வெளிநாட்டுமந்திரி திரு. ஏர்னெஸ்ட் பெவினுக்கு அப்பொழுது தேகாரோக்கியம் நன்றாயில்லை. அவரை ஒரு நாற்காலியில் இருத்தி அப்படியே நாற்காலியோடு சேர்த்துத் தூக்கிக் கொண்டு மேல் மாடிக்குச் சென்றார்கள்.

காஷ்மீர் நெருக்கடி திடீரென்று எரிமலை போல் வெடித்த காலம் அது. மகாநாட்டின் முடிவில் நேருஜியும் பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி (ஜனாப் குலாம் ஹூசெயின்?) யும் ஒருவர் தோள் மீது ஒருவர் கைபோட்டுக் கொண்டு புன்முறுவலுடன் கீழேஇறங்கிவந்த காட்சியைப் பத்திரிகைக்காரர் ஆவலோடு படம் பிடித்தார்கள்.

செனேட் கட்டடத்திலிருந்து நேருஜி தங்கியிருந்த ராணி மாளிகை சுமார் நூறுகஜதூரம் தான். வாயிலில் நின்றுகொண்டிருந்த தமது காரைத் திரும்பியும்பாராமல் நேருஜி ராணி மாளிகையை நோக்கிநடந்தார். புரோகிராமில் இல்லாத இந்த நிகழ்ச்சி நேருவின் பரிவாரங்களுக்குள்ளே அதிர்ச்சியை உண்டுபண்ணிவிட்டது.

நேருதரிசனத்துக்காக பெரிய தபாற்கந்தோர் கட்டடத்திலும் கோர்டன்தோட்டத்திலும் பல்லாயிரம் மக்கள் குழுமியிருந்ததைத் தெரிந்துகொண்டுகைகூப்பிக்கொண்டே நடந்து சென்றார்.

அவருடன் அச்சமயம் உற்ற நண்பன் கிருஷ்ணமேனனும், செல்வப்புதல்வி இந்திரா காந்தியும் வந்திருந்தார்கள். ஏற்கனவே வகுக்கப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்கு இம்மியளவேனும் மாறாக நேருஜி செல்லும்போது மேனன் தீ மிதித்தவர் போல் குதிப்பார். உலகெங்கணுமிருந்துவந்த பத்திரிகைநிருபர்களுடன் அவர் இரண்டுநிமிடங்கள் அதிகமாகக் கதைத்துவிட்டால், 'ம், மறுபடியும் ஆரம்பித்துவிட்டார்' என்று சலித்துக கொள்வார் மேனன். இந்திராவுக்கு இதெல்லாம் சாவசகஜம் போலும். கொஞ்சமேனும் நிலைதளம்பாது அமைதியாக நிற்பார்.

* * *

புதுடில்லிக்கு சில மைல் தூரத்திலுள்ள ராஜ்கொட் என்னுமிடத்தில், யமுனை நதி தீரத்தில், மகாத்மாகாந்தி தகனம் செய்யப்பட்ட சமாதிக்கு 300 கஜம் வடக்கே நேருஜியின் தகனக்கிரியைகள் நடந்தன. மகாத்மாவுக்கு எழுப்பப்பட்டிருக்கும் மிகவும் எளிதான, பரிசுத்தமான சமாதியைப் போலவே நேருவுக்கும் நிர்மாணிப்பார்கள் என்று எதிர்பார்க்கலாம்.

இலங்கையின் முதலாவது பிரதமமந்திரி டி. எஸ். சேனநாயக்காவின் சடலம், அவர் எமது சுதந்திர சிற்பிகளில் முதல்வர் என்ற முறையில், டாரிங்டன் சதுக்கம் எனப்பட்ட சுதந்திர சதுக்கத்தில் தகனம் செய்யப்பட்டது. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவை அவருடையபிறப்பிடமாகிய ஹொரகொல்லைத் தோட்டத்தில் அடக்கம் செய்திருக்கிறார்கள்.

இங்கிலாந்தில் அரசவம்சத்தவர்கள் மட்டுமல்லாமல் தேசத்துக்குப் பேர் எடுத்துக்

(4-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத் தொடர்ச்சி)

கொடுத்த பெரியார்கள் அனைவரையும் வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயத்தில் அடக்கம் செய்வது வழக்கம். மகாகவி ஷேக்ஸ்பியரை மட்டும் வெஸ்ட்மின்ஸ்டர் ஆலயத்தில் வைக்கமுடியாமற் போய்விட்டது. ஏனென்றால் அவர் இறந்தது 1616-ம் ஆண்டில்— தமது பிறப்பிடமாகிய ஸ்ராட்போர்டில், அக்காலத்தில் குதிரை வண்டில் மூலமாகத்தான் செய்திகள் பரவும். ஷேக்ஸ்பியர் இறந்த செய்தி லண்டனுக்குவந்துசேர ஐந்து நாட்கள் பிடித்ததாம் அதற்கிடையில் அவர் ஸ்ராட்போர்டிலேயே அடக்கமாகிவிட்டார்.

"வழிப்போக்கன்"

# நேரு சமாதியில் பல்லாயிரம் மக்கள் அஞ்சலி

## 4-வது தினமாக பல்வேறு ஆலயங்களில் பிரார்த்தனை

புதுடில்லி, மே 31

காந்திஜியின் சமாதிக்கருகே நேருஜி தகனம் செய்யப்பட்ட இடத்திற்கு பல்லாயிரக்கணக்கான மக்கள் சென்று அஞ்சலி செய்து, மலர் தூவி, தலைசாய்த்து வணக்கம் செலுத்தி வருகிறார்கள்.

சீக்கிய குருக்கள், நேற்று தங்கள் மதநூலிலிருந்து ஓதுதல் நடத்தினர்.

நேற்று சேகரிக்கப்பட்ட நேருவின் அஸ்தி 8 செப்புப் பத்திரங்களில் சேகரிக்கப்பட்டு பிரதமரின் வீட்டுத் தோட்டத்தில் வைக்கப்பட்டுள்ளன. சங்கையும் யமுனையும் ஸரஸ்வதியும் கலக்கும் திரிவேணியில் அஸ்தி கரைக்கப்படும். புதுடில்லியிலிருந்து விசேஷ ரயிலில் அலகபாத்துக்கு அஸ்தி எடுத்துச் செல்லப்படும்.

தற்போது பிரதமமந்திரியின் இல்லத்துக்கு ஆயிரக்கணக்கான மக்கள் சென்று அஞ்சலிசெலுத்திவருகிறார்கள.

ஜப்பானிய அரசாங்கத்தினதும், மக்களினதும் ஆழ்ந்த துக்கத்தை ஜனாதிபதி ராதா கிருஷ்ணனையும், பிரதமர் நந்தாவையும் சந்தித்த வெளிநாட்டுமந்திரி ஒகிரா தெரிவித்துக் கொண்டார்.

நாட்டிலுள்ள பல்வேறு ஸ்தாபனங்களும் அனுதாபம் தெரிவித்துள்ளன. கோவில்களிலும் மசூதகளிலும் கிறிஸ்தவ தேவாலயங்களிலும் இதர மதஆலயங்களிலும் நேற்று 4-வது தினமாக பிரார்த்தனைகளும் பொதுக் கூட்டங்களும் நடைபெற்றன.

புதுடில்லியில் தமிழ் நாட்டைச் சேர்ந்த எம். பி.க்கள் கூடி காலஞ்சென்ற பிரதமருக்கு அனுதாபம் தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினார்கள். இதில் தமிழ் நாட்டு முதன்மந்திரி திரு. பக்தவத்சலமும் தொழில்மந்திரி திரு. வெங்கட்ராமனும் கலந்து கொண்டனர்.

## தகவல் இலாகாவுக்கு பெரும் சோதனை

புதுடில்லி, மே 31

நேரு மரணத்தினால் கடந்த புதன் கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை இந்திய வெளிவிவகார தகவல் ஸ்தாபனம் ஒரு லட்சத்திற்கும் அதிகமான செய்திகளைச் சமாளிக்கவேண்டி வந்தது. இதுவரை இவ்வளவு பிரமாண்டமான அளவு வேலைகளை அது எதிர் நோக்கியதில்லை எனக் கூறப்படுகிறது.

## முஸ்லிம்களுக்கு சீனாவில் கொடுமை

ஹங்காங், மே 31

சீனாவில் மதப்பற்றுள்ளவர்கள் கொடுமைப்படுத்தப்படுகிறார்கள் என்றும், அவர்கள் பிறபோக்காளர் எனக் கூறப்பட்டுப் பல இம்சைகளுக்கு உட்படுத்தப்படுகிறார்கள் என்றும் அறிவிக்கப்படுகிறது. முஸ்லிம்கள் மீது வெள்ளிக்கிழமை தொழுகைகள் நடத்தக்கூடாதென கட்டளை பிறப்பிக்கப் பட்டிருப்பதாய்க் கூறப்படுகிறது.

## இந்திராவுக்கு 20,000 செய்திகள்

புதுடில்லி, மே 31

உலகம் முழுதிலுமிருந்து தந்தையை இழந்த ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு 20,000க்கு மேற்பட்ட பரிவுச் செய்திகள் வந்திருக்கின்றன; வந்துகொண்டிருக்கின்றன.

## இளமையிலேயே குணத்தினால் கீர்த்தி பெற்றவர் நேரு

### இந்திய வானொலியில் இலங்கைப் பிரதமர் அஞ்சலி

புதுடில்லி, மே 31

பிரதமமந்திரி திரு. நேரு கடந்த 50 வருடங்களாக மக்களின் சேவைக்குத் தம் வாழ்நாளை அர்ப்பணித்தார் என்றும் காந்திஜியின் தலைமையில் இளவயதிலேயே அவர் உலகப் பிரசித்தம் அடைந்தபின் பலகோடி ஆசிய மக்களுக்கு தம் பேச்சுத் திறமையினால் வழிகாட்டி வந்தார் என்றும் இலங்கைப் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அகில இந்திய ரேடியோ மூலம் பேசுகையில் கூறினார்.

"நேருவின் சிறந்த மனிதப் பண்பு, பொதுமனிதன்பால் அவருக்கிருந்த ஈடுபாடு, நற்குணங்கள் ஆகியன அவரை மக்கள் தலைவராக ஆக்கின. உலக மன்றங்களில் அவர் கீர்த்திபெற்ற அரசியல்வாதியாக அவர் காட்சியளித்தார். ஆசியாவின் புதிய நாடுகளுக்கு அவர் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுத்தார். கலவரமுற்றஉலகத்தில் வழிகாட்ட இப்போது நேரு இல்லை" என்றும் சிறிமாவோ கூறினார்.

"நேருஜி அழியாப்புகழ்பெற்றார். அவருக்காகத் துக்கப் படுவோம் அஞ்சலி, செலுத்துவோம்" என்றும் இலங்கைப் பிரதமர் கூறினார்.

## கிருஷ்ணமேனன் தீவிர முயற்சி

புதுடில்லி, மே 31

பிரதமர் பதவிக்கான போட்டியில் தாம் கலந்து கொள்வதுபற்றி திரு. கிருஷ்ணமேனன் தீவிரமாகச் சிந்திக்கவில்லை எனக் கூறப்படுகிறது, ஆனால் காங்கிரஸ் கட்சிக்குள் இடதுசாரிக் குழுவினரின் தலைவர் என்ற முறையில் முன்னாள் எண்ணெய்மந்திரி திரு மாளவியாவுடன் அவர் திரைமறைவில் தீவிரமாக வேலை செய்து வருகிறார் எனவும் கூறப்படுகிறது.

திரு. மொரார்ஜி தேசாய் வலதுசாரிகளின் பொதுவான ஆதரவைப் பெற்றிருக்கிறார். சாஸ்திரி மத்திய வழிக் குழுவினரின் ஆதரவைப பெற்றிருக்கிறார்.

இடதுசாரி சிறுபான்மையினர் தங்கள் சார்பாக எவரையும் நிறுத்தவில்லையாயினும் எந்த அபேட்சகருக்கும் இடதுசாரிகளின் ஆதரவ மிக முக்கியம் எனக் கருதப்படுகிறது.

தேசாய்க்கே அதிக ஆதரவு இருப்பதாக அவரது ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். இடதுசாரியோ அல்லது வலதுசாரியோ எவராய்இருந்தாலும் நேர்மையான ஒருவரையே திரு. கிருஷ்ணமேனன் ஆதரிக்கிறார் என்றும் இவ்வகையில் மொரார்ஜிக்கே அவர் ஆதரவாய் இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

## சிக்கிம் நாட்டில் 12 நாள் துக்கம்

கேங்டாக், மே 31

பிரதமர் நேருவின் மரணத்தையிட்டு சிக்கிமில் 12 நாள் துக்கம் கொண்டாடப்படுகிறது. கொடிகள் அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டுள்ளன. அதுவரை அரசாங்கக் கொண்டாட்டங்கள் விலக்கப்பட்டிருக்கின்றன. பிரதமர் நேருவுக்காக லாமாக்கள் பிரார்த்தனைகள் நடத்தி வருகின்றனர்.

நேபாளத்தில் பல அனுதாபக் கூட்டங்கள் நடைபெற்றன. நேபாள ரேடியோ "சாச்சா நேரு" என்ற தலைப்பில் விசேஷ நிகழ்ச்சிகளை ஒலிபரப்பியது.

நேருவின் மரணத்தினால் ஒவ்வொரு அராபியரும் ஆழ்ந்த துக்கததில்மூழ்கியிருக்கிறார்கள். என்று அரபு உலகப் பத்திரிகைகள் கூறியருக்கின்றன.

---

## நேருவுக்கு சிலைகள்

புதுடில்லி, மே 31

நேருவின் பிறந்ததினமான நவம்பர் 14-ம் திகதி நாட்டின் பல பகுதிகளில் ஜவஹர்லாவின் முழு உருவச் சிலைகள் நிறுவப்படவிருக்கின்றன.

## "நேருவுக்கு நேர் நேருவே"

— அட்லி

லண்டன், மே 31

"நேருவைவிடத் தகுதிபெற்ற மனிதர் எவரும் இவ்வுலகில் இல்லை. அவர் அமைதியான சகிப்புத்தன்மை வாய்ந்த மாபெரும் ராஜதந்திரி" என இங்கு நடைபெற்ற ஒரு கூட்டத்தில் முன்னாள் பிரிட்டிஷ் பிரதமர் அட்லி பிரபு கூறினார்.

---

## சீனாவின் கடும் எதிர்ப்பு

பீக்கிங், மே 31

உத்தேச ஆசிய-ஆபிரிக்க 2-வது மகாநாட்டில் ரஷ்யா கலந்து கொள்ளக்கூடாது என்றும், ரஷ்யா ஒரு ஆசியநாடு அல்ல என்றும், முதலாவது ஆசிய மகாநாட்டில் ரஷ்யா கலந்துகொண்டதில்லை என்றும் சீனா மீண்டும் வற்புறுத்தியிருக்கிறது.

ரஷ்யா பங்குபற்றத் தாம் கடுமையாக எதிர்ப்பதாயும் சீனா கூறியது.

---

## கடைசி வார்த்தை

புதுடில்லி, மே 31

"எல்லா பைல்களையும் தஸ்தாவேஜுகளையும் பார்வையிட்டுவிட்டுப் பைசல் செய்துவிட்டேன்" நேருஜி தமது மரணத்திற்கு முன்தினமிரவில் கூறினார். இவையே அவருடைய இறுதிவார்த்தைகள் என பிரதமமந்திரி நந்தா கூறினார்.

## சாஸ்திரி பிரதமர்? லண்டனில் கருத்து

புதுடில்லி, மே 31

லோகசபையின் தற்போதைய விசேஷ கூட்டத்தொடர் வருகிற ஜூன் மாதம் 5-ந் திகதி முடிவடையுமென்றும் அதன் பின் 3 தினங்களுக்குள் புதிய தலைவரை அங்கத்தினர்கள் தெரிவுசெய்வார்களென்றும் அறிவிக்கப்படுகின்றது.

புதிய தலைவர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்படவேண்டுமென காங்கிரஸ் நிர்வாகக் கமிட்டியின் 24 பேரும் சம்மதம் தெரிவித்திருப்பதாக தகவல் மந்திரி கூறினார்.

அநேகமாக திரு. லால்பகதூர் சாஸ்திரி புதிய பிரதமராகத் தெரிவுசெய்யப்படக்கூடுமென எதிர்பார்ப்பதாக லண்டன் வட்டாரங்கள் கருதுகின்றன.

தலைமைப் பதவிக்கு திரு. குல்ஸாரிலால் நந்தா, திரு. லால்பகதூர் சாஸ்திரி, திரு. மொரார்ஜி தேசாய் ஆகிய மூவரைத் தவிர, ஷெட்யூல் வகுப்புத் தலைவர் திரு. ஜகஜீவன்ராமும் போட்டியிடுவதாகக் கராச்சி வட்டாரங்கள் கூறின.

## டில்லியில் புதிய அரசாங்கம் ஏற்பட்டவுடன் பேச்சுக்கள்

### அயூப்புடன் நடக்கலாம் என பூட்டோ அறிவிப்பு

புதுடில்லி, மே 31

நேருவின் ஈமச்சடங்குகளில் கலந்துகொள்ள வந்திருந்த பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ நேற்று மாலை கராச்சி புறப்பட்டார்.

மந்திரி சுவர்ணசிங்கும், ஷேக் அப்துல்லாவும் அவரை வழியனுப்பி வைத்தனர். இந்தியத் தலைவர்களுடன் தான் நடத்திய பேச்சுக்களிலிருந்து இரு நாடுகளுக்கும் இடையேயுள்ள காஷ்மீர் உள்ளிட்ட சகல பிரச்னைகளையும் தீர்ப்பதற்கான பரிவுணர்ச்சியை அவர்கள் வெளியிட்டதாயும் பூட்டோ கூறினார்.

திரு. பூட்டோ கராச்சி விமானநிலையத்தில் பேசியபோது இந்தியாவில் புதிய அரசாங்கம் ஏற்பட்டபின் இரு நாடுகளுக்குமிடையே தகராறுக்கான விஷயங்கள் பற்றித் தொடர்புகொள்ள முடியுமென நம்புவதாயும் நிலைமை ஸ்திரமாகும்வரை காஷ்மீர் பற்றிப் பாகிஸ்தான் எவ்வித வற்புறுத்தலையும் மேற்கொள்ளாது என்றும் கூறினார். டில்லியில் ஸ்ரீ பூட்டோ, பிரதமர் நந்தா, சாஸ்திரி, காங்கிரஸ் தலைவர் திரு. காமராஜ், ஸ்ரீமதி இந்திரா காந்தி, ஜனாதிபதி ராதா கிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்து பேசினார். இந்தியாவின் அடுத்த புதிய பிரதமமந்திரி ஜனாதிபதி அயூப்கானுடன் பேச்சு நடத்தும் சாத்தியம் இருக்கிறதென்றும் பூட்டோ தெரிவித்தார்.

ஷேக் அப்துல்லா தமது பேச்சுக்களை தொடர மீண்டும் எப்போது பாகிஸ்தான் வருவாரென்பது குறித்துத் தமக்குத் தெரியாதென்றும் பூட்டோ குறிப்பிட்டார்.

## நாய்களின் மலர்வளையம்

புதுடில்லி, மே 31

காலஞ்சென்ற நேரு அருமையாக வளர்த்துவந்த மூன்று நாய்கள் கடந்த 29-ந் திகதி தமது எஜமானரின் வீட்டில் தனிமையில் தவித்தன.

மாது, பெடபி, புட்லி என்று இந்த நாய்கள் அழைக்கப்படுகின்றன.

இந்த மூன்று நாய்களும் ஒவ்வொரு நாள் காலையிலும் பிரதமர் நேரு உணவு புசிக்கும்போது அவருக்கருகில் சென்று அன்புடன் வட்டமிட்டு அவர் தரும் பண்டங்களை நன்றியுடன் ஏற்றுப் புசிப்பது வழக்கம்.

நேரு இறந்த படுக்கை அறையை இந்த மூன்று நாய்களும் தமது எஜமானரைக் காணமல் வேதனையுடன் சுற்றி வந்துகொண்டிருந்தன.

பிரேத ஊர்வலம் ஆரம்பமாவதற்கு முன் இந்த மூன்று நாய்கள் சார்பாக நேருவின் சடலத்தின்மீது மலர்வளையம் வைக்கப்பட்டது.

---

## பௌத்த மதத்தை தனியே விடுங்கள்

— எம். பி.

அநுராதபுரம், ஞாயிறு

தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக அரசியல்வாதிகள் பௌத்த மதத்தை உபயோகப்படுத்துவதைவிட்டு விட வேண்டும் என அநுராதபுர எம். பி. திரு. கே. பீ. ரத்னயகா நிவத்தகச்சதிய வித்தியாலயத்தின் 30-வது ஆண்டு நிறைவுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

திரு. ரத்னயகா மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கைக்கு பௌத்த மதம் மிக்க புனிதமான பெரும் செல்வம். எனவே எந்தச் சந்தர்ப்பத்திலும் பௌத்தமதம் அரசியலுடன் கலந்துவிடக் கூடாது.

## மாணவரின் சுற்றுப்பிரயாணம்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

கொழும்பு நில்வீதி மத்திய மகாவித்தியாலயத்தில் உயர் வகுப்பில் பயிலும் 50 மாணவர்களைக் கொண்ட கோஷ்டியினர் இலங்கையில் பிரசித்தி பெற்ற இடங்களைப் பார்வையிடுவதற்காக சென்ற மாதம் 26-ம் திக்தி புறப்பட்டு யாழ்ப்பாணம், டம்புல்லை, சிகிரியா, பொலநறுவை, திருக்கோணமலை, மட்டக்களப்பு, நுவரெலியா ஆகிய இடங்களைப் பார்வையிட்டு நேற்று கொழும்பு திரும்பினர்.

∴ ∴ ∴

யாழ்ப்பாணம், திங்கள்

கோண்டாவில் கிழக்கு இராமகிஷ்ண அரசினர் வித்தியாசாலை மாணவர்கள் ஆசிரியர்களுடன் யாழ்ப்பாணத்திலுள்ள சரித்திர, சமய முக்கியதுவம் வாய்ந்த இடங்களைப் பார்வையிடும் நோக்குடன் சென்றமாதம்ஒரு சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டார்கள். சங்கிலியன்தோப்பு, யாழ்ப்பாணம் டச்சுக்கோட்டை, காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலை, கீரிமலை, மாவிட்டபுரம், சந்நிதி ஆலயங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர், ஈழநாடு பத்திரிகைக்காரியாலயத்திற்கும் சென்று அங்கு வேலைகள் நடைபெறும் முறைகளையும் அவதானித்தனர்.

# "கூட்டரசாங்கம் ஏற்படின் ஜனநாயகம் அழிந்துவிடும்"

## யூ. என். பி. அறிக்கை

கொழும்பு ஞாயிறு

"ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு இலங்கையின் இன்றைய அரசியல் நிலையை நன்கு ஆராய்ந்தபின் பொதுமக்களுக்கும் தமது கட்சியின் கிளைகளுக்கும் மார்ச் மாதம் 12ம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டதிலிருந்து கடந்த 4 மாதங்களாக அரசியல் அரங்கில் நிகழ்ந்த சம்பவங்கள்பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதென்று தீர்மானித்தது."

இவ்வாறு இம்மாதம் 29ம் திகதி திரு. டட்லி சேனநாயக்கா தலைமையில் நிகழ்ந்த ஐக்கிய தேசியக்கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:-

"பாராளுமன்றம் கலைக்கப்பட்ட ஒரு சில தினங்களுக்குள்ளேயே சர்வாதிகார ஆட்சியொன்றை நிறுவுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அத்தகையதொரு முயற்சி வெற்றிபெருவண்ணம் நமது கட்சி எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளை நாடே அறியும். இதுபற்றிய முழு விபரங்களையும் எமது கட்சித் தலைவர் திரு. டட்லி சேனநாயக்கா பாராளுமன்றம் கூடும்போது பகிரங்கப்படுத்தவிருக்கிறார்.

சமீப காலத்தில் இடதுசாரி ஐக்கிய முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் ஒன்றை அமைப்பதற்குப் பகீரதப் பிரயத்தனம் செய்துவருவதை அனைவரும் அறிவோம். 9 அம்சத் திட்டமொன்றை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்காகவே கூட்டரசாங்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகச் சொல்லப்படுகிறது. இந்தத் திட்டத்திற் குறிப்பிடப்படும் அம்சங்களில் சிலவற்றை இந்த அரசாங்கமோ அல்லது வேறெந்தச் சோஷலிச ஜனநாயக அரசாங்கமோ இடதுசாரியுடன் கூட்டுச் சேராமலே நிறைவேற்றுதல் கூடும். இத்திட்டத்தில் இடம்பெறும் ஏனைய சில அம்சங்களோ ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கவல்ல, மாக்ஸிஸ சித்தாந்தக்துக்கமைந்தவையாகும். எனவே இடதுசாரிகள் இன்றைய அரசாங்கத்துடன் இணைய முயல்வது இந்த நாட்டின் அரசாங்கத்தை பொதுமக்களின் வாக்குரிமையினலல்லாது பலாத்காரத்தால் பெற்றுச் சர்வாதிகார ஆட்சியொன்றை நிறுவுவதற்கே என்பது வெளிப்படை.

# கூட்டரசாங்கம் எதற்காக?

## எம். பி.க்கள் விளக்கம்

கொழும்பு, ஞாயிறு

'நாட்டுக்கு நல்ல சேவை செய்வதற்காகவே சகல முற்போக்கு சக்திகளையும் ஒன்றுபடுத்த அரசாங்கம் முயற்சி செய்கிறது. இந்த முயற்சி வெற்றிபெற்ருல் இப்போது அடைந்து வரும் அபிவிருத்தியிலும் பார்க்க மிகத்துரிதமாக நாடு அபிவிருத்தியுறும்.'

இவ்வாறு கம்பகா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயகா அலுத்துகம கிராமசபை பகுதியிலுள்ள கொரியாவில் புதிய மின்சார நிலைய திறப்பு விழாவையொட்டி நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

உதவி சுகாதாரமந்திரி திரு. ஜே. பி. ஒபயசேகரா நிலையத்தைத் திறந்து வைத்தார்.

# சுட்டிபுரம் 6-ம் திருவிழா

கொடிகாமம், ஞாயிறு

வரணியிலுள்ள சுட்டிபுரம் அம்மன்கோவிலின் ஆருவது திருவிழா நேற்றிரவு சிறந்த முறையில் நடைபெற்றது. இதற்குமுன் நடைபெற்ற 5 திருவிழாக்களிலும் பார்க்க, 6-ம திருவிழா, மேளம், ஜோடனைகள், நடனக்கச்சேரி, சிகரங்கள் ஆகியவற்றில் சிறந்து காணப்பட்டது. யாழ்ப்பாணத்தின் பலபாகங்களிலிருந்தும் ஏராளமானேர் வந்திருந்தனர்.

10-ம், 11-ம், 12-ம் திருவிழாக்களில் இம்முறை பலத்த போட்டி இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. 6-ம் திகதி சனிக்கிழமை தேர்த்திருவிழா நடைபெறும்.

# "கலைவிழாக்களினுல் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்"

## முத்தமிழ் கலைவிழாவில் உதவி அரசாங்க அதிபர்

பளை, ஞாயிறு

"சில வருடங்களுக்கு முன் இருந்த நிலையிலும் பார்க்கி பச்சிலைப்பள்ளி பகுதி இன்று கலை, கலாச்சாரம், பண்பாடுகளில் எவ்வளவு முன்னேறி இருக்கிறதென்பதற்கு இன்று நடைபெறும் முத்தமிழ் விழா சான்ருகும். இடத்திற்கு இடம் இப்படியான கலைவிழாக்களினுல் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்."

பளை மகாவித்தியாலயத்தில் வண்ணுங்கேணி கலைவாணி கழகம் நடத்திய முத்தமிழ்கலைவிழாவை திறந்து வைத்துப் பேசிய வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. ஏ. பெருமையினர் மேற்கண்டவாறு கூறினர். திரு. பெருமையினர் தலைமையில் நடைபெற்ற இலக்கிய அரங்கில் சைவப் புலவர் தங்கம்மா அப்பாக்குட்டி வள்ளுவன் வழி என்ற பொருள் பற்றிப் பேசினர்.

இசையரங்கிற்குத் தலைமை வகித்த இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை பேசுகையில், கலைகள் அனைத்திலும் இசைக்கலை அதி உன்னதமானதென்றும், இசையை வளர்ப்பது இறைவனை வழிபடும் தொண்டென்றும், இந்நாட்டு இளைஞர் இவ்வித விழாவை ஏற்படுத்தியது. இவர்களின் பண்பாட்டை காட்டுகிறதென்றும் கூறினர் சங்கீத வித்துவான் திருமதி சரசுவதி-பாக்கியராசா இசை விருந்தளித்தார்.

நடன நாடக அரங்கிற்கு தலைமை வகித்த கலையரசு கே. சொர்ணலிங்கம் பேசுகையில், நடனம், நாடகங்களினுல் நமது ஐம்பொறிகளில் கண்ணும், காதும் முக்கியமாக தொழில்படுகின்றன என்றும் கூறினர். யாழ். மறுமலர்ச்சி மன்றத்தினரின் சந்திப்பு என்ற நாடகமும், கீதாஞ்சலி நல்லையாவின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

# 'லைசென்ஸ் துவக்கு கிடைக்கவில்லை'

சாவகச்சேரி, ஞாயிறு

கடவத்தையிலுள்ள தோட்ட சுப்ரீண்டனுக்குரிய லைசென்ஸ் துவக்கொன்றை, கொடிகாமத்தைச் சேர்ந்த பொன்னையா என்பவர் எடுத்து வந்ததாக சாவகச்சேரி பொலிசாருக்கு கடவத்தை பொலிஸ் அறிவித்ததைத் தொடர்ந்து நேற்று சாவகச்சேரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, பொன்னையாவின் வீட்டைச் சோதனை செய்தது.

தோட்ட சுப்ரீண்டனின் மைத்துனரான சில்வா இது சம்பந்தமாக சாவகச்சேரி, வத்தளை பொலிஸாருக்கு நேரில் புகார் செய்துள்ளார். இது வரை துவக்கு கண்டுபிடிக்கப் படவில்லை.

# நேருஜிக்கு அஞ்சலி

உரும்பராய், ஞாயி.

"ஒருவனைக் கொண்டு அவனது நண்பனின் குணதிசயங்களை யாம் அறியலாம். செல்வக் குடும்பத்தில் தோன்றிய பெரியார் நேரு உயர்ந்த பண்பாடுடையவர். அவர் உலகப் பெரியாராவர். அவர் மறைவு இந்தியாவுக்குமட்டுமல்ல உலகத்துக்கே ஈடுசெய்யமுடியாத பெரிய நஷ்டமாகும்" என்று உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலை மாணவர்கள் முன்னிலையில் பேசுகையில் பாடசாலைத் தலைமையாசிரியர் திரு சி. பொன்னுத்துரை கூறினர்.

திரு. அ. பஞ்சாட்சரம் பேசுகையில், "நேருஜி மனிதர் குல மாணிக்கம். பெரியார் நேருஜி புகழ் பூத்த குடும்பத்திலே தோன்றி, புகழுடனே வாழ்ந்து புகழுடனேயே மறைந்தார். அவர் மறைவினுல் இந்தியா தேசம் மட்டுமல்ல உலகமே இருண்டு விட்டது" என்ருர். உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் அமைந்த முருகன் ஆலயத்தில், கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டிருந்த மாணவர்கள் நேருஜியின் ஆன்மசாந்திக்கு இறைவனைப் பிரார்த்தனை செய்தனர்.

# தெல்லிப்பழைக்கு "உத்தரதேவி"

## நடவடிக்கை எடுக்குமாறு எஸ். ஜே. வி.க்குகோரிக்கை

நல்லூர், ஞாயிறு

காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு அதிகாலையிலும் கொழும்பிலிருந்து காங்கேசன் துறைக்கு இரவிலும் வரும் உத்தரதேவி தெல்லிப்பழையில் சிறிது நேரம் நின்றுபோக நடவடிக்கை எடுக்கும்படி காங்கேசன் துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்திடம் தெல்லிப்பழை தமிழரசுக் கட்சிக்கிளை கேட்டுள்ளது.

இது விஷயமாக போக்குவரத்து மந்திரியையும், ரயில்வே ஜெனரல் மனேஜரையும் சந்தித்து நடவடிக்கை எடுக்கும் படியும் தெல்லிப்பழைக்கிளையினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திரு. செல்வநாயகம் இது சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சருடனும். ரயில்வே ஜெனரல் மனேஜருடனும் பேச்சு நடத்தவிருப்பதாக அறியப்படுகிறது.

# தற்போதைய தலைவர் ராஜினமாச் செய்வார்?

## தேர்தல் முடிவின் எதிரொலி

கொடிகாமம், ஞாயிறு

கச்சாய் கிராமசபையின் தற்போதைய தலைவர் திரு.ஏ. ரி. சிதம்பரப்பிள்ளை, தமது அங்கத்தவர் பதவியை ராஜினமா செய்யத் தீர்மானித்திருப்பதாகவும், புதிய தலைவர் தேர்தல் நடைபெற்றபின்,ராஜினமா கடிதத்தை சமர்ப்பிப்பார் என்றும் தெரிய வருகிறது.

தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு அரைகுறையாக இருக்கும் திட்டங்களை, வேறு ஒரு தலைவரின் கீழ், அவர் அங்கத்தவராக இருந்து நிறைவேற்ற முடியாதென்றும், புதிய திட்டங்களை செயல்படுத்துவதற்கு அவருக்கு போதியளவு ஆதரவு புதிய சபையில் இல்லையென்றும், அதனுல் அங்கத்தவராக இருந்து கிராமத்திற்கு எதுவித நன்மையும் செய்ப முடியாதென்றும், அவரது ஆதரவாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளதாக அறியப்படுகிறது.

# காட்டு மரங்கள் கடத்தல்?

சாவகச்சேரி, ஞாயிறு

மாங்குளம், வவுனியா பகுதிகளிலுள்ள காடுகளிலிருந்து அரசாங்கத்திற்கு சொந்தமான காட்டுமரங்கள் தென்மராட்சிப் பகுதிக்கு கொண்டுவரப்பட்டு பலகைகளாக அரியப்பட்டு கூடுதலான விலைக்கு விற்பனை செய்யப்படுவதாக தெரியவருகிறது.

விசாரணை ஒன்றிற்கு சென்ற சாவகச்சேரி பொலிஸார் கொடிகாமத்தில் உள்ள ஒரு வளவில் பலகைகளாக அரியப்பட்ட ஏராளமான மரங்களை கண்டு பிடித்தார்களென்றும் இதுசம்பந்தமாக வீட்டுச்சொந்தக்காரர்களை விசாரித்தபோது அம்மரங்கள் தங்களுடையதல்லவென்றும் மரங்களைப் பற்றி தங்களுக்குத் தெரியாதென்றும் ஒரு மாத காலமாக அந்த வளவிற்குள் மரங்கள் இருப்பதாகக் கூறினர்களென்றும் அறியப்படுகிறது.


# இந்தப் பாடு அவசியம்!



"அல்கத்தீன்"பைப் வளையுந்தன்மையுடையது. ஒதுக்கிவைப்பதற்கும், இடத்திற்கு இடம் எடுத்துச் செல்வதற்கும், அவசியத்திற்கு ஏற்றவாறு அல்கத்தீன் பைப்பை சுருளாக சுருட்டுவும் கூடும்.

பாரமற்றது, வளையுந் தன்மையுடையது, அரிப்பை எதிர்க்க வல்லது.

# 'அல்கத்தீன்' பைப்

பி. எஸ். 1972: 1961

இலங்கையில் அல்கத்தின் பைப் உற்பத்தி செய்பவர் :

**இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் (எக்ஸ்போர்ட்) லிமிடெட்**

(இங்கிலாந்தில் நிறுவப்பட்டது. அங்கத்தவரின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது. இம்பீரியல் கெமிக்கல் இன்டஸ்ட்ரீஸ் உப கம்பெனி).

தபாற் பெட்டி 352, கொழும்பு.

ICI

# சுழிபுரம் விக்ரோறியா கல்லூரி

## இல்ல விளையாட்டுப்போட்டி முடிவுகள்

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி வருடாந்த விளையாட்டுப் போட்டி நான்கு இல்லங்களுக்கிடையே நடைபெற்றது. முதலாவது இல்லமாக நீல இல்லம் 234 புள்ளிகளைப் பெற்றது. இரண்டாவது இல்லமாக மஞ்சள் இல்லம் 230 புள்ளிகளையும், மூன்ளுவது இல்லமாக சிவப்பு இல்லம் 214 புள்ளிகளையும், நான்காவது இல்லமாக பச்சை இல்லம் 211 புள்ளிகளையும் பெற்றன. போட்டி முடிவுகள் பின்வருமாறு:-

109 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு ஆண்கள்—ரி. தர்மலிங்கம், கே. முத்துராசா, என். தெய்வேந்திரன்.

100 யார் ஓட்டம் மத்திய பிரிவு ஆண்கள்— எம். சத்திகுரு, கே. சின்னத்துரை. ரி. உலகநாதன்.

100 யார் ஓட்டம் மேற்பிரிவு ஆண்கள்— வி. திருநாவுக்கரசு, பி. கைலாயநாதன், ஏ. கதிரமலைநாதன.

100 யார் ஓட்டம் மேற்பிரிவு பெண்கள்—கே. யோகேஸ்வரி, கே. இரத்தினேஸ்வரி, பி. மனோரஞ்சிதம்.

100 யார் ஓட்டம் மத்திய பிரிவு பெண்கள்—பி. கைலாயவதியார், கே. சத்தியபாமா, எஸ். விஜயலட்சுமி.

75 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்கள்— பி. நவமலர், ரி. விமலாதேவி, எஸ். நவநீதமணி.

குண்டு எறிதல் மத்திய பிரிவு ஆண்கள்.

ஏ. சண்முகநாதன், வி. வேங்கடேஸ்வரன், எம். சடாச்சரம்.

உயரப் பாய்தல் மேற்பிரிவு ஆண்கள்— என். சிவசண்முகம், என். கணேசகுமார், கே. சிவநாயகம்.

220 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு ஆண்கள்— ரி. தர்மலிங்கம், கே. முத்துராசா, எஸ். தெய்வேந்திரம்.

220 யார் ஓட்டம் மத்திய பிரிவு ஆண்கள்— ரி. சிவராசா, வி. வேங்கடேஸ்வரன், ஏ. கணேசலிங்கம்.

220 யார் ஓட்டம் மேற்பிரிவு ஆண்கள்— கே. சிவநாயகம், கே. விஞயகமூர்த்தி, பி. கைலாயநாதன்.

220 யார் ஓட்டம் மேற்பிரிவு பெண்கள்— கே. யோகேஸ்வரி, கே. இகசூரிராணி, கே. இரத்தினேஸ்வரி.

220 யார் ஓட்டம் மத்திய பிரிவு பெண்கள—பி. கைலாயவதியார், எம். நாச்சியார், கே. சண்டிராணி.

150 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்கள்— ரி. விமலாதேவி, என். விஜயலட்சுமி, கே. ஜெயசோதராதேவி.

நீளப் பாய்தல் கீழ்ப் பிரிவு ஆண்கள்— ரி. தர்மலிங்கம், கே. தவசூரியகுமார், பி. சிவபாலன்.

ஒரு மைல் ஓட்டம் ஆண்கள்— கே. பஞ்சலிங்கம், வி. மாயகிருஷ்ணன், எம். தவராசா.

நிதான ஓட்டம் மேற்பிரிவு பெண்கள்—சி. சிவபாக்கியம், கே. தவமணிதேவி, என். தவமணிதேவி.

நிதான ஓட்டம் மத்தியபிரிவு பெண்கள்— எம். நாச்சியார், டி. ஞானமலர், எஸ். தெய்வராணி.

நிதான ஓட்டம் கீழ்ப்பிரிவு பெண்கள்— கே. குகபூசணி, ரி. அரியமலர், எம். விஜயலட்சுமி.

அஞ்சல் ஓட்டம் 440 யார் கீழ்ப்பிரிவு ஆண்கள்—சிவப்பு இல்லம், மஞ்சள் இல்லம், பச்சை இல்லம்.

அஞ்சல் ஓட்டம் 440 யார் மத்திய பிரிவு ஆண்கள்— நீல இல்லம், மஞ்சள் இல்லம், சிவப்பு இல்லம்.

அஞ்சல் ஓட்டம் 4X110 யார் மேற்பிரிவு ஆண்கள்— மஞ்சள் இல்லம், நீல இல்லம், சிவப்பு இல்லம்.

அஞ்சல் ஓட்டம் 4X110 யார் பெண்கள்— பச்சை இல்லம், நீல இல்லம், மஞ்சள் இல்லம்.

அஞ்சல் ஓட்டம் 4X110 யார் மத்திய பிரிவு பெண்கள்— பச்சை இல்லம், நீல இல்லம், மஞ்சள் இல்லம்.

அஞ்சல் ஓட்டம் 4X110 யார் கீழ்ப்பிரிவு பெண்கள்— மஞ்சள் இல்லம், பச்சை இல்லம், நீல இல்லம்.

பழைய மாணவர் ஓட்டம்— ஏ. லவிந்திரன், என். செல்வரத்தினம், இ. கிருஷ்ணதுரை.

தட்டு எறிதல் மேற்பிரிவு: ஆண்கள் — ரி. தெய்வேந்திரன், எஸ். சண்முகநாதன், கே. சிவபாலன்.

முப்பாச்சல் மேற்பிரிவு: ஆண்கள் — எ. செல்லத்துரை, கே. பஞ்சலிங்கம், எ. பத்மநாதன்.

பந்து எறிதல் மேற்பிரிவு. பெண்கள் — பி.மனோரஞ்சிதம் கே. இரத்தினேஸ்வரி, கே. இரத்தினேஸ்வரி.

பந்து எறிதல் மத்தியபிரிவு: பெண்கள் — பி. கைலாயவதியார், எம். அன்னலட்சுமி, கே. தங்கரத்தினம்.

தடைஓட்டம் மேற்பிரிவு: ஆண்கள — எ. செல்லத்துரை, எம். தவராசா, எ. பத்மநாதன்.

## வரக்காபொலயில் சமயதீட்சை

கண்டி, சனி

அம்பேபுச என்னும் இடத்திலுள்ள ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலய மண்டபத்தில், வரக்காப்பொல சைவமகா சபையின் ஆதரவில் அண்மையில் வேதாரணிய வாசியும், யாழ்ப்பாணத்து குப்பிளானில் வசிப்பவருமான ஸ்ரீலஸ்ரீ அ. சோமசுந்தரக் குருக்களால் இங்குள்ள சைவப்பெருங்குடி மக்களுக்கு சமய தீக்ஷை சைவாகம விதிப்படி அளிக்கப்பட்டு அதன் தத்துவமும் உரைக்கப்பட்டது. அன்று விசேஷமாக, மாதெனியா அரசினர் பாடசாலைப் பிள்ளைகள் வெகு தூரத்தில் இருந்து இங்கு வந்து தீக்ஷையில் பற்றியது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் சமயபாட வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

## பிரவேச பரீட்சை ஒத்திவைப்பு

நல்லூர், ஞாயிறு

கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் நடைபெறவிருந்த ஆசிரிய கலாசாலைப் பிரவேசப் பரீட்சை காலவரையறையின்றிப் பின்போடப்பட்டுள்ளது.

பாரதப் பிரதமர் திரு. நேருவின் அகால மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து பரீட்சை பின் போடப்பட்டுள்ளது. பரீட்சை நடைபெறும் திகதி விரைவில் அறிவிக்கப் படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 1-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00,

காலை 6-45 பாமாலை, 6-55 கிறிஸ்தவநற்சிந்தனை, 7-15 தேர்ந்தஇசை, 7-15 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இலங்கை ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-55 நாகேஸ்வரி சபாபதி — வீணை, 7-15 தனேஸ்வரி முத்துக்குமாரு, தில்லைநாயகி நாகலிங்கம் — பாட்டு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 10-00 நேயர் விருப்பம்.

## 'சமய அறிவு மாணவருக்கு அவசியம்'

யாழ்ப்பாணம் திங்கள்

இன்னல்கள் பல அடைந்த போதிலும் சமயத்தின் உண்மை நெறிகளை உலகுக்கு எடுத்துக் காட்டியவர்கள் சமயகுரவர்கள். ஞானசம்பந்தர் இளமைப்பருவத்திலேயே இறைவனுடன் தொடர்பு கொண்டார். அவரது அருட்பாக்கள் நமக்கெல்லாம் நல்வழியைக் காட்டுவனவாகும்.

இவ்வாறு வண்ணை நாவலர் வித்தியாசாலையில் வியாழக்கிழமை நடைபெற்ற திருஞானசம்பந்தர் குருபூசைவிழாவில் சொற்பொழிவாற்றியஆசிரியர் திரு. கா. கிருஷ்ணசாமி ஐயர்குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் மாணவர் இளமை தொடக்கஞ் சமய அறிவைப்பெற்று நெறி தவருது நடந்துவர வேண்டியதும் அவசியமாகும் என்ருர். விசேஷ பூசை ஆராதனையும் மகேசுரபூசையும் நடைபெற்றன.

## "பரீட்சை முடிவை வெளியிடுக"

உடுப்பிட்டி, ஞாயிறு

மாணவ ஆசிரிய பரீட்சை முடிவுகளை விரைவில் வெளியிடுமாறு இலங்கைப் பண்டிதர் சங்கமும் வாணி கலைக்கழகமும் கூட்டாகச் சேர்ந்து கல்வி மந்திரிக்கு தந்தியடித்துள்ளன.

அத்தந்தியில், ஏழு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற தபாற் கந்தோர் தலைவர் தந்தியாளர் பரீட்சை முடிவுகளையும் விரைவில் வெளியிடுமாறும்" கேட்டுக்கொண்டுள்ளனர்.

## திருஞானசம்பந்தர் குருபூசை

நீர்வேலி, ஞாயிறு

நீர்வேலி ஸ்ரீ விநாயக சனசமூகநிலைய இந்துசமயவிருத்திக் கழகத்தினரால் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனுர் குருபூசை நீர்வேலி கிராமசபைத் தலைவர் திரு. இ. அப்பாத்துரை தலைமையில் கொண்டாடப்பட்டது. செல்வன் சி. சிவபாதம், செல்வன் சே. லோகநாதன் ஆகியோர்சொற்பொழிவாற்றினர். இறுதியில் பிரசாதம் வழங்கப்பட்டது.

## 21 கோரிக்கை..

6-ம் பக்கத் தொடர்ச்சி

களும், கோரிக்கைகளும் கவனிக்கப்படாதிருக்கின்றன. தீர்க்கப்படாதிருக்கின்றன"

10,000 அங்கத்தவர்களைக் கொண்ட இச்சங்கத்தின் பல கிளைகளைச் சேர்ந்த சுமார் 500 பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பின்வருவோர் புதிய உத்தியோகஸ்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்:

தலைவர்: டி. பி. திஸநாயகா, (மூன் தொடர்ந்து 6 வருடங்களாக இப்பதவிக்குதெரிவுசெய்யப்பட்டுள்ளவர்), உபதலைவர்கள்: ஏ. டி. குணசேன, டி. துரைரத்தினம், பொதுக்காரியதரிசி: ஏ. ஹேரத். உதவிப் பொதுக்காரியதரிசி: என். விஜயசிங்கம், உதவிக் காரியதரிசிகள்: பி. ராஜநாயகம், எம். டி. சில்வா, பொருளாளர்: ஆர். கே. டி. எஸ். ராஜபக்ஷ. 12 பேரைக்கொண்ட கமிட்டி ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

### தீர்மானங்கள்

21 கோரிக்கைகளையும் ஏற்றுக்கொள்வதெனக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

வாழ்க்கைச் செலவு உயர்வுக்கும் ஒரே சீரான சம்பள நிர்ணயம் இல்லாமை குறித்தும், இலங்கை நிர்வாக சேவை அமைப்பு குறித்தும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

அரசாங்க ஊழியர்களுக்கு அரசியலுரிமை கொடுக்கப்பட வேண்டுமெனும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## இலங்கை . . .

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானித்திருப்பதாகவும் இப்பிரச்னையை எந்த அடிப்படையில் தீர்க்கவேண்டும் என்பது பற்றி விரைவில் இந்திய அரசாங்கத்திற்கு அறிவிக்கப்படுமென்றும் பிரதமர் சிறிமா தெரிவித்தார்.

பாரதப் பிரதமர் நேருவின் மரணத்தினுல் இலங்கை-இந்தியர் நட்புறவில் எந்தவிதமான மாறுதலும் ஏற்படக்கூடிய அறிகுறியில்லையென்றும், பிரதமர் நேரு மறைந்தாலும் எதுவித மாறுதலும் ஏற்படப்போவதில்லையென்றும் கூறிய பிரதமர் சிறிமா, பாரதப் பிரதமர் நேருவின் மறைவினுல் இரு நாடுகளுக்கிடையேயுள்ள நட்புறவு மேலும் பலப்படுமெனத் தெரிவித்தார்.

இலங்கையின் முன்னுள் பிரதமர்களில் ஒருவரான சர் ஜோன் கொத்தலாவலை, நேருவின் மறைவிற்கு பின் இந்தியாவில் கம்யூனிஸ்ட்ஆட்சி நடைபெறுமென்றும் அதனுல் இலங்கைக்கு அதிக ஆபத்து ஏற்படுமென்றும் கூறிய கருத்தை பத்திரிகை நிருபர்கள் பிரதமர் சிறிமாவிடம் தெரிவித்தனர்.

இப்படியான பயம் இலங்கை பிரஜைகளிடம் தொடர்ந்து இருந்துவருகிறதா என்று பத்திரிகை நிருபர்கள் கேட்டபோது சர் ஜோன் கொத்தலாவலை ஏன் இப்படி கூறினுர் என்று தனக்கு தெரியவில்லையென்றும் அவருக்கு தன்னுல் பதில்சொல்ல முடியாதென்றும், அவரும் நானும் வெவ்வேறு பாதையில் சிந்திப்பவர்கள் என்றும் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா கூறினுர்.

## 'திருக்குறளின் மகத்துவம்'

கச்சாய், ஞாயிறு

'இறைவனை அடைவதற்கு இல்லறத்தை விட்டு காட்டுக்கு ஓடவேண்டியதில்லை. இல்லறத்தில் இருந்தே சகலருக்கும் தொண்டுசெய்து சீரிய வாழ்வு வாழ்ந்து சிவன் கழல அடையலாம். இந்த உண்மையைத் திருக்குறள் காட்டுகின்றது. திருவள்ளுவர் ஒரு சிறந்த கர்மயோகி. தனது போதனைகளைச் சாதனையில் காட்டிய மேதை. அவருடைய நூல் மிகப் பழைய காலத்தில் இயற்றப்பட்ட போதும் புது மணத்துடன் இன்றும் 40 க்கு மேற்பட்ட மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதுடன் யாவராலும் பொதுமறையாக ஏற்கப்பட்டுள்ளது. இவரது தினத்தைக் கொண்டாடுவது மிகவும் பொருத்தமே" இவ்வாறு ''வள்ளுவர் நெறி' என்றும் பொருள்பற்றி கலவெட்டித்திடல் மாதர் சங்கத்தில் பேசிய திரு. ஆர். ரி. சுப்பிரமணியம் கூறினுர்.

'மங்கையருக்குரிய கடமைகள் யாவும் திருக்குறளில் வகுக்கப்பட்டுள்ளதாக' நன்றி கூறிய ஆசிரியை செல்வி க. பரமேசுவரி கூறினுர். இக் கூட்டத்திற்கு செல்வி சி. சிவபாக்கியம் தலைமைவகித்தார்.


### கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண் களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளைவு போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்

தயாரிப்பாளர்கள்: GABRIELS, Chunnakam. 273

### வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

## நிறுத்துங்கள்!




தரம் குறைந்த மைகளினுல் உங்கள் பேனையை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனையைப் பாதுகாக்கும் சொல்வ் X உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனைகளைப் புத்துணர்ச்சியுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உறுதுணை செய்கின்றது.

இது ஒரு பாக்கர் பேனு கம்பனியின் உற்பத்தி

[illegible]ரால் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.


## உள்ளூராட்சிச்சேவை

காரியாலய காரிய சகாயர் பதவி
தெல்லிப்பழை கிராம சபை

மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வேதன அடிப்படை: வருடாந்தம் ரு. 540-22×12 ரு. 804.

3. முடிவு திகதி: 30-6-1964.

4. மேலும் தகவல்களுக்கு 12-6-64 தேதிய அரசாங்க வர்த்தமானியின் 4-வது பகுதியைப் பார்க்கவும்.

த. செல்வரத்தினம்
தலைவர்,
தெல்லிப்பழை கி.ச.

தெல்லிப்பழை கி. ச.,
அலுவலகம்,
5-1964. 381


## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

15/1, செட்டித்தெரு நல்லூரிலுள்ள 5 பரப்புக் காணியும், சகலவித வசதிகளுடன் கூடிய வீடும் விற்பனைக்குண்டு. கீழ்க்காணும் விலாசதாருடன் தொடர்பு கொள்ளவும். வ. சிவசுப்பிரமணியம், 43, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், அல்லது திருமதி சின்னம்மா வைத்திலிங்கம், சுகாதாரக் கந்தோரடி, கட்டுடை, மானிப்பாய். 471

### TUITION

Undergrades offer tuition in Chemistry, Physics, Botany, Zoology for Pre. G. C. E., G. C. E. University Entrance. Contact M. Sundramoorthy. No 2, 2nd lane, Brown road, Jaffna. 472

### தேவை

சாப்பாடு, சிற்றுண்டிகள் தயாரிக்கக்கூடிய சுறுசுறுப்புள்ள சமையல்காரர் தேவை. சம்பளம் சாப்பாடு மற்றும் வசதிகளுடன் ரூ. 100/- தொடர்பு கொள்ளவும். எம். கே. நடராசா, புளியங்குளம். 473


### நன்றி நவிலல்

எனது தமையனுர் பிரம்மஸ்ரீ சோ. சபாரத்தின ஐயர் அவர்களது புதல்வி சௌபாக்கியவதி ஈஸ்வரிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி ஆசிரியர் சிரஞ்சீவி சேஷய்யர் சத்யோஜாத சர்மாவிற்கும் நடைபெற்ற திருமணவிழாவிலும், வரவேற்புபசாரத்திலும் கலந்து சிறப்பித்த உறவினர்கட்கும் நண்பர்கட்கும்-வாழ்த்துச் செய்திகள் அனுப்பிய பெரியோர்கட்கும் எனது நன்றியைப் பணிவுடனும் அன்புடனும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

தனித்தனியே ஒவ்வொருவருக்கும் நன்றிநவில் இயலாமைக்கு வருந்துகின்றேன்.

இங்ஙனம்
சோ. சிவகடாக்ஷ ஐயர்,
காரைநகர். 475

# 21 கோரிக்கைகளையும் பெறுவது அவசியம்

## அரசாங்கசேவை குமாஸ்தாக்கள் சங்கத்தலைவர் வற்புறுத்தல்

கொழும்பு, ஞாயிறு

"எமது கோரிக்கைகள் குறித்து அரசாங்கம் அநுதாபம் காட்டாவிட்டால் எமது உரிமைகளைப் பாதுகாக்க நாம் தயாராக இருக்கின்றோம். உண்மையான சோஷலிஸ வழியில் அரசாங்கம் செல்லுமானல் எமது ஒத்துழைப்பைத் தரவும் நாம் முன்நிற்கிறோம். எந்த சூழ்நிலையையும் எதிர்நோக்க நாம் ஒற்றுமையுடன் தயாராக இருக்கிறோம்.'

இவ்வாறு அரசாங்கசேவை குமாஸ்தாககள் சங்கத் தலைவர் திரு. டி. பி. திஸநாயகா தெரிவித்துள்ளார்.

கொழும்பு புதிய நகரமண்டபத்தில் நடைபெற்ற மேற்படி சங்கத்தின் 7-வது ஆண்டு நிறைவுக்கூட்டத்தில் பேசுகையிலேயே திரு. திஸநாயகா மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. திஸநாயகா மேலும் பேசுகையில் கூறியதாவது:

இந்த நாட்டின் தொழிற்சங்க சரித்திரத்தில் ஓர் முக்கிய கட்டம் இப்போதுதோன்றியுள்ளது. அரசாங்கத் துறையிலும் தனிப்பட்ட துறையிலுமுள்ள சகல தொழிற் சங்கங்களும் 21 கோரிக்கைகள் பெறும்விஷயத்தில் ஒத்துழைப்பதெனத் தீர்மானித்துள்ளன.

இந்த கோரிக்கைகள் அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதற்கு முன்னரே அரசாங்கம் இவற்றையெல்லாம் நிராகரிப்பதென தீர்மானித்துள்ளது பெரும் வியப்பளிப்பதாக இருக்கிறது.

இந்த கோரிக்கைகளைப் பெறுவது அநாவசியமானதொரு் விஷயம் இவற்றை நிராகரிப்பதற்கு அரசாங்க சார்பில் எந்த ஆதாரமும் கிடையாது.

அரசாங்கசேவையில்கடமையாற்றும் ஊழியர்களுக்கு 10 வருடங்களுக்கு மேலாக சம்பள உயர்வு அளிக்கப்படவில்லை. 1953-ம் வருடத்திலேயே இறுதியாக சம்பள உயர்வு அளிக்கப்பட்டது. அப்போதிருந்ததைவிட ஒரு ரூபாயின பெறுமதி இப்பொழுது நான்கு மடங்குக்கு அதிகமாகக் குறைந்துவிட்டது.

அரசியல் துறையிலும் இப்போது பெரும் நெருக்கடிநிலை தோன்றியுள்ளது. அரசாங்கமும் பெரும் இக்கட்டுக்குள்ளாகியிருக்கிறது. தொழிலாளர்களின் பொருளாதாரப் பிரச்னை

(5-ம் பக்கம் பார்க்க)

## மீசாலையில் இசைவிழா

கொடிகாமம், ஞாயிறு

மீசாலை தமிழிசைச் சங்கத்தின் ஆதரவில் வெள்ளை மாவடிப் பிள்ளையார் கோவில் சந்நிதானத்தில் நேற்று முன்தினம் இசை விழா ஆரம்பமானது. இவ்விழாவில் பல கலைஞர்கள் கலந்துகொண்டார்கள்.

இரண்டாவது தினமாக நேற்று நடைபெற்ற இசை விழாவில் ஏராளமான மக்கள் கலந்துகொண்டார்கள்.

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
M. G. M. Presents
The 4 Days of Naples
(best war Film)

இப்பொழுது திரையிடப்படுகிறது !

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)

ராஜ் (நீர்கொழும்பு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)

தினசரி 3 காட்சிகள் 2-30, 6-30, 10-30

ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) ஜூப்பிட்டர் (குருணைகலை) தாஜ்மஹால் (கல்முனை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
ராதா - ராஜன் - புஷ்பலதா
நடிக்கும்



முருகன் பிரதர்ஸ்

நானும் ஒரு பெண்

இந்திய ஜனாதிபதியின் வெள்ளிப்பதக்கம் பெற்ற சிறந்த சித்திரம்.

## மகாகும்பாபிஷேகம்

ஊர்காவற்றுறை, சனி

தீவுப்பகுதியில் பிரசித்தி பெற்ற ஆலயமான புளியங்கூடல் மகாமாரி அம்பாள் ஆலய மகாகும்பாபிஷேகம் வியாழக்கிழமை நடைபெற்றது. பிரதிஷ்டா பூஷணம், நயினை ஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் மேற்பார்வையில் நடைபெற்ற இக் கும்பாபிஷேக வைபவத்தை ஆறு சைவக் குருக்கள்மார் நடாத்திவைத்தனர். அன்று இரவு நடைபெற்ற திருவிழாவின்போது திரு. எஸ். வினசித்தம்பி "அம்பாள் மகிமை" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம் நிகழ்த்தினர். செல்வி தருமலெட்சுமி செல்வத்துரையின் சங்கீதக் கச்சேரியும் நடைபெற்றது.

## குருபூசையும் வள்ளுவர் தினமும்

யாழ்ப்பாணம், திங்கள்

திருஞானசம்பந்தர் குருபூசையும் திருவள்ளுவர் திருநாள் விழாவும் திரு. க. மயில்வாகனம் தலைமையில் வட்டு வீரபத்திர சிவன்கோயில் முன்றிலில் நடைபெற்றது. திரு. கு. சிவசுப்பிரமணியம் திருஞானசம்பந்த சுவாமிகளுடைய திருப்பதிகச் சிறப்பியல்புகள் பற்றி சொற்பொழிவாற்றினர். திரு. வீரசிங்கம் 'திருவள்ளுவரும் சமுதாயமும்' என்னும் பொருள்பற்றி பேசினர்.

## அரசாங்க அதிபர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தரோ அரசாங்க உதவிபெறும் ஸ்தாபன உத்தியோகத்தரோ கவலையினமாகவோ தாமதமாகவோ அல்லது தமது கடமையில் தவறியோ இருப்பதாகப் பலவித புகார்கள் செய்துள்ளதைத் தொடர்ந்தே இவ்வித நடவடிக்கை அரசாங்கத்தினல் எடுக்கப்பட்டுள்ளதென நம்பப்படுகிறது.

## நேரு மறைவுக்கு அனுதாபம்

யாழ்ப்பாணம், திங்கள்

திருக்கேதீஸ்வர ஆலய புனருத்தாரண சபையின் பொதுக் கூட்டம் சென்ற மாதம் 27 ம் திகதி தெல்லிப்பளை மகாஜன கல்லூரியில் சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெற்றபோது காலஞ்சென்ற பாரதப் பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால் நேருவுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக கூட்டத்தில் சமுகமளித்திருந்த அனைவரும் எழுந்து இரு நிமிட மௌனம் அனுஷ்டித்தார்கள்.

உலக நாடுகளின் சமாதானத்துக்கும் ஒற்றுமைக்கும் உழைத்த இந்தியப் பிரதமர் நேருவின் திடீர் மரணம் குறித்து நாம் மிக்க வருத்தமடைகிறோம். இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பண்டைய காலந்தொட்டு இருந்துவந்த உறவை ஸ்ரீ நேரு பலப்படுத்தி வந்தார். இத்தகைய ஒருவரது பிரிவு எமக்கு மிகக வருததத்தைத்தருகிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயிருந்துவரும் உறவு மேலும் வளரவேண்டுமென நாம் விரும்புகின்றோம் எனத் தெரிவிக்கும் தீர்மானமொன்றும் நிறைவேற்றப்பட்டது.

# 'நேருவின் கொள்கைகள் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்றென்றும் நிலைத்துநிற்கும். சீன என்று இந்திய மண்ணில் காலடி எடுத்துவைத்ததோ அன்றுமுதல் நேருவிற்கு இரத்தக் கொதிப்பு ஏற்பட்டு அதனுலேயே முடிவில் மரணம் சம்பவித்தது. அவர் மறைந்தாலும் அவரது கொள்கைகள் மககள் மனதில் நிலைத்துநிற்கும்.

யாழ். மாநகரசபை அங்கத்தவர் திரு. எஸ். நாகராசா பேசும்போது மறைந்துபோன பிரதமருக்காக கண்ணீர் வடிக்கும் இலங்கைப் பிரதமர், ஸ்ரீ நேருவின் இலட்சியத்திற்கும், கொள்கைகளுக்கும் மதிப்புக் கொடுப்பதாகத் தெரியவில்லையென்றும், நேருவின் மரணத்திற்கு இலங்கைப் பிரதமர் வருத்தபபடுவது உண்மையானல் சிறுபான்மை மக்களுக்கு நீதி வழங்கவேண்டுமென்றும், அதுதான் மறைந்துபோன உலகத் தலைவரான நேருவிற்கு செய்யும் கைமாறென்றும் அவரை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டுமானல், அவரின் வழியைப் பின்பற்றவேண்டுமென்றும் கூறினர்.

முஸ்லிம மக்கள் சார்பில் பேசிய ஜனுப் எம். எம். சுல்தான் கூறியதாவது:

நேருஜியுடன், இந்திய சுதந்திரத்திற்காக பல முஸ்லிம் பெரியார்கள் போராடினர்கள் ஆனல் சுதந்திரம் கிடைக்குமுன் அந்த முஸ்லிம் பெரியார்கள் இறந்துவிட்டார்கள்.

இந்தியாவிலுள்ள ஐந்து கோடி முஸ்லிம் மக்களுக்காக அவர் பெரும் பாடுபட்டார். அப்படிப்பட்ட பெரியாருக்கு எங்கள் அனுதாபத்தை முஸ்லிம் மக்கள் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் பேசும்போது கூறியதாவது:

இந்தியாவின் சுதந்திரத்திற்காக மட்டுமன்றி மற்ற நாடுகளின் சுதந்திரத்திற்காகவும் ஸ்ரீ நேரு உழைத்தார். இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்கள் நேருவின வழியை பின்பற்றி சுதந்திரம் பெற முழுமூச்சாகப் பாடுபடவேண்டும். அதுவே அவரை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளக்கூடிய ஒரே ஒரு வழி. அவர் காட்டிய வழியை உலக மக்கள் பின்பற்றி நன்மைபெற வேண்டும்.

முதலியார் சி. முத்துத்தம்பி, திரு. சிவபாதசுந்தரம், திரு. கதிரவேற்பிள்ளை ஆகியோரும் பேசினர்கள். கூட்ட ஆரம்பத்தில் நேருவின் மறைவிற்கு அனுதாபம் தெரிவிக்கும் பொருட்டு இரு நிமிஷ மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது. இந்திய மக்களுக்கும், அரசாங்கத்திற்கும், குடும்பத்திற்கும் கூட்டத்தில் அனுதாபத் தீர்மானம் ஒன்றும் நிறைவேற்றப்பட்டது.

# சர். ஒலிவர் அனுதாபம்

புதுடில்லி, மே 31

நேருஜியின் மரணம் குறித்து உலகின் சகல பகுதிகளிலுமிருந்தும் அனுதாபச் செய்திகள் இங்கு குவிந்தவண்ணமாக விருக்கின்றன.

இலங்கையின் முன்னுள் கவர்னர் ஜெனரல் சர். ஒலிவர் குணதிலகா பிரதமர் திரு. குல்சாரிலால் நந்தாவுக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

இலங்கை கடற்படை, இந்திய கடற்படைத் தளபதிக்கு அனுதாபச் செய்தியொன்றை அனுப்பியுள்ளது.

### முதியவரின் அனுதாபம்

மாஸ்கோவிலுள்ள இந்திய ஸ்தானிகராலயத்தில்; மக்கள் நேரிலும், டெலிபோனிலும், தந்திமூலமாகவும், அனுதாபம் தெரிவித்தவண்ணமாக விருக்கின்றனர். இங்கு வசிக்கும் பென்ஷன்பெறும் முதியவர் ஒருவர் அனுப்பியுள்ள அனுதாபச்செய்தியில்; "உலகத் தலைவர் நேருவின் அஸ்தியில் எனது கண்ணீர் கலக்கட்டும். அவரின் மறைவுக்கு எனது அனுதாபத்தை நான் கண்ணீரால சமர்ப்பிக்கின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

## நாகம் தீண்டி சிறுவன் மரணம்

அநுராதபுரம், ஞாயிறு

இங்குள்ள புதிய நகரில் அனுரா நகைவியாபார ஸ்தாபனத்தின் சொந்தக்காரரான திரு. வீரரத்னவின் 6 வயது நிரம்பிய மகன் அசோகா வீரரத்ன என்ற சிறுவன் நாகம் தீண்டி இறந்தான்.

## கதிரேசன் ஆலய வாலஸ்தாபனம்

அநுராதபுரம், ஞாயிறு

இங்குள்ள ஸ்ரீ கதிரேசப் பெருமானின் வாலஸ்தாபன வைபம் அச்சுவேலி பிரம்மஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்களினல் உரிய கிருத்தியங்களுடன் சிறப்பாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

காலையில் ஸ்ரீ கதிரேசப் பெருமானையும் ஏனைய பரிவாரமூர்த்திகளையும் பூரண கும்பத்தில் ஆவாகனம் செய்து கும்பமூர்த்திகளை புனித நகரத்திலுள்ள பழைய கோவிலிலிருந்து ஊர்வலமாக முருகநாம பஜனையுடன் புதியநகரத்தில் இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கோவிலுக்கு எழுந்தருளச் செய்தனர். புதிய கோவிலில் ஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் வேதாகம முறைப்படி கிரியைகள் நடத்தி மூர்த்திகளை வாலஸ்தாபனம் செய்து வைத்தார்.

அநுராதபுரத்தின் புதிய நகரததிலுள்ள பல வீதிகளையும் உள்ளடக்கிய கதிரேசப் பெருமானின் ஊர்வலமும் வாலஸ்தாபன வைபவமும் ஆசிய சோதி திரு. ஜவஹர்லால் நேருவின் மறைவு குறித்து மிகவும் சுருங்கியதாகவும் ஆடம்பரமற்ற முறையில் அடக்கமாகவும் நிறைவேற்றப்பட்டது. இவ்வைபவத்தின்போது அநுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலய சங்கீத ஆசிரியர் திரு. த. இராசையாவின் தலைமையில் வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் தொண்டர்களும் முருகநாம பஜனை செய்தனர். அநுராதபுரத்தில் வாழும் சைவமக்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்து வைபவத்தில் கலந்துகொண்டனர்.

ஊர்வலத்தின்போது நகர்ப் பொலிசார் வாகனப் போக்குவரத்துகளைக் கட்டுப்படுத்தி ஒழுங்கை நிலைநாட்டினர்.

# இலங்கை-இந்தியர் பிரச்னையை தீர்ப்பதில் இன்னும்நம்பிக்கை

## சென்னையில் சிறிமா கருத்து

சென்னை, மே. 31

"இலங்கை இந்தியர் பிரச்னையை தீர்ப்பதில் நாம் இன்னும் நம்பிக்கையை இழந்துவிடவில்லை. இப்பிரச்னையில் ஒரு நல்ல முடிவிற்குவர நான் இன்னும் முயற்சி எடுத்துவருகிறேன்" என்று டில்லியிலிருந்து கொழும்பு திரும்பிவரும் வழியில், சென்னையில் பத்திரிகை நிருபர் மத்தியில் பிரதமர் சிறிமா பண்டாரநாயகா பேசுகையில் கூறினர்.

தற்பொழுதுள்ள சீன இந்திய எல்லைப்பிரச்னை தற்காலிகமானதெனா சீனப் பிரதமர் சூ-என்-லாய் பாரதப்பிரதமர் நேருவின் மரணத்திற்கு அனுப்பிய அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளதை முக்கியமாக சுட்டிக்காட்டி கொழும்புத் திட்டத்தை சீன ஏற்றுக்கொள்ளக்கூடிய எந்த விதநம்பிக்கையுமிருக்கிறது என்று பத்திரிகை நிருபர்கள் இலங்கைப்பிரதமர்சிறிமாவோ பண்டாரநாயக்காவை கேட்டபொழுது, இதைக் கேட்க மிகவும் ஆறுதலாக இருக்கிறதெனக் கூறினர்.

இப்பிரச்னை சம்பந்தமாக அண்மையில் எதுவித [illegible]மும் காணப்படவில்லை [illegible]றும் பத்திரிகையாளரிடம் பிரதமர் சிறிமா பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கு பிரஜாஉரிமை வழங்கும் விஷயமாக, இந்தியாவின் புதிய பிரதமரை விரைவில் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த

(5-ம் பக்கம் பார்க்க)

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் 1-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.